செ.வெ.எண்: 82 நாள்:28.11.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆண் குழந்தை பற்றிய தகவல் தெரிந்த நபர்கள் உடனடியாக சம்மந்தப்பட்ட அலுவலரிடம் தெரிவிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் சைல்டு லைன் மூலம் மீட்கப்பட்ட ஆண் குழந்தையை தத்து நிறுவன நிர்வாகியிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.11.2016) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆண் குழந்தையை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தத்து நிறுவன நிர்வாகியிடம் ஒப்படைத்து கூறியதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம், கொப்பனாப்பட்டி பகுதியில் உள்ள சாலையோரத்தில் 20.11.2016 அன்று ஆதரவற்ற நிலையில் ஆண்குழந்தை ஒன்று கண்டெடுக்கப்பட்டு சைல்டு லைன் மூலம் மீட்கப்பட்டு புதுக்கோட்டை அரசு இராணியார் மகப்பேறு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. தற்பொழுது நலமுடன் உள்ள இக்குழந்தை மதுரை அழகுசிறை கிளாரிசியன் தத்து நிறுவன நிர்வாகியிடம் பராமரிக்கும் வகையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் இக்குழந்தையை பற்றி விபரம் தெரிந்த நபர்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு எண்:02, லெட்சுமி எஸ்டேட், இராஜகோபாலபுரம் அஞ்சல், புதுக்கோட்டை - 622 003, தொலைப்பேசி எண்கள்:04322-261266, கைப்பேசி : 7305897305 என்ற தொலைப்பேசி எண்களிலும் தகவல் தெரிவிக்கலாம் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரேணுகாதேவி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.இளையராஜா, குழந்தைகள் நலக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**